2012 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

மின்மாற்றிகள்

***5072—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, குள்ளம்பட்டி ஊராட்சி, கே. புதூர் கிராமத்தில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, குள்ளம்பட்டி ஊராட்சி, கே.புதூர் கிராமத்தில் 250 கே.வி.ஏ./11 கி.வோ. மின்மாற்றி அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் அப்பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட கன்னங்குடி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே சென்ற முறை கேட்டிருந்தேன். தேவகோட்டையிலே இப்போது அந்தத் துணை மின் நிலையம் இருக்கின்றது. அங்கிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கக்கூடிய கன்னங்குடி ஒன்றியத்திற்கு மின்சாரத்தை எடுத்துச் செல்லும்போது, மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, அங்கு துணை மின் நிலையத்தை அமைத்துத் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

[2012 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மின்மாற்றி சம்பந்தப்பட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தெந்த இடத்திலே எல்லாம் மின் தேவை அதிகரித்திருக்கிறதோ, அதையெல்லாம் கணக்கிட்டு, அந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகளை ஆய்வு செய்து தேவைக்கேற்ப, நிதிநிலைமைக்கு ஏற்ப, அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடியில் ஒரு மின்மாற்றி நிர்மாணிக்கப்பட்டு,* joint kit *என்கிற ஒரு சிறிய பொருள் இல்லாத காரணத்தால், மாதக் கணக்கில் அது செயல்படாமல் இருக்கின்றது. டீச்சர்ஸ் காலனியிலும் அதேபோன்ற நிலை இருக்கிறது. பரவலாக மின் மாற்றிகள் நிர்மாணிக்கப்பட்ட பிறகும் சின்ன சின்ன பொருட்கள் இல்லாததால் அவை செயல்படாமல் இருக்கிற அந்த நிலையைப் போக்க, நிர்மாணிக்கப்பட்ட மின் மாற்றிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, முதலில் அவற்றை முற்றாக முடிக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், குறிப்பிட்ட நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இதுகுறித்த ஆய்வுக் கூட்டங்களை நடத்துகின்றபோது*

2012 மார்ச் 28]

சிறு சிறு தளவாடங்கள் இல்லாத குறையினால் காலதாமதமாவதைத் தவிர்த்திட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, இப்பொழுது தமிழ்நாடு மின் வாரியம் விரைவாக, தேவையான சிறு, சிறு தளவாடப் பொருள்களைக் கொள்முதல் செய்வதில் விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மிக விரைவிலே அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள். கேள்வி, டிரான்ஸ்ஃபார்மர் பற்றியது.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும் மின்சாரத் துறைக்கு முக்கியமான கேள்வி. தேனி மாவட்டத்தின் நீண்டநாள் கோரிக்கை, இலவச மின் இணைப்பு. அங்கு நிறைய நீர் ஆதாரம் இருந்தும்கூட, மற்ற மாவட்டத்திற்கு இணையாகத்தான் தேனி மாவட்டத்திற்கும் கொடுக்கிறார்கள். குறிப்பாக, முல்லைப் பெரியாறு, வைகை ஆறு, வரட்டாறு, சுருளியாறு, கொட்டக்குடி ஆறு போன்ற நதிகள் நிறைய இருந்தும்கூட, மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படும் இலவச மின் இணைப்பு போன்றே தேனி மாவட்டத்திற்கும் கொடுக்கிறார்கள். விவசாயிகள் நிறைய பேர் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள். தேனி மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டில் கொஞ்சம் கூடுதலாக இலவச மின் இணைப்பு கொடுத்துதவ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது பதிவு மூப்பு அடிப்படையிலே வழங்கப்பட்டு வருகிறது. அதிலே யாருக்காவது முன்னுரிமை வழங்குவதற்கு நமது விதிமுறைகளிலே இடம் இல்லை. ஆகவே, வரிசைப்படி மின் இணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேனி மாவட்டத்திற்கு என்று அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா

அவர்களைப் பொறுத்த அளவிலே தமிழகத்திலுள்ள அனைத்தும், அம்மா அவர்களுக்குச் சொந்த மாவட்டங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லா இடங்களிலும் தேவைக்கு ஏற்ப, நிதிநிலைக்கு ஏற்ப விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற பணிகளை விரைவுபடுத்துவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

திரு. ப. பார்த்தசாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், சூளைபள்ளம் என்ற பகுதியில் பல தெருக்களில் மின்கம்பங்கள் தலைக்கு மேலே, உயிருக்கு ஆபத்தான நிலையிலே இருக்கின்றன. அதை அகற்றி, பூமிக்கு அடியில் பதித்துத் தருமாறு சென்ற கூட்டத் தொடரிலேயே நான் கோரிக்கை வைத்திருந்தேன். தயவுகூர்ந்து, இந்த முறையாவது இதற்கு ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராமல் ஏற்பட்ட 'தானே' புயலின் காரணமாக, இங்கே பல இடங்களில் இருக்கின்ற மின்கம்பங்களும், மின் மாற்றிகளும் உடனடியாக, அவசரத் தேவைக்காக அங்கே அனுப்பி வைக்கப்பட்டன. மின்கம்பங்கள் தயாரிக்கப்படுகின்ற பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் அந்தப் பணிகள் இறுதி செய்யப்பட்டு, தேவையான இடங்கள் அனைத்திற்கும் மின்கம்பங்கள் வழங்கப்படும். அதன்பிறகு, இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு பதிவு செய்து காத்திருப்புப் பட்டியலில் இருக்கிறார்கள். மின் இணைப்பு பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர்*

அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், திண்டுக்கல் தொகுதியில் ஒரு குறிப்பிட்ட விவசாயிக்கு நான் follow–up செய்கிறபோது, பதிவு மூப்பு வரிசை என்பது நகர்வதாகவே இல்லை. அவர்கள் பணம் கட்டி, பல ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து விசாரித்து, உரிய முறையிலே பதிவு மூப்பு அடிப்படையிலே அவர்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மின் இணைப்பைப் பொறுத்த அளவிலே பதிவு மூப்பு அடிப்படையில் வழங்குவதில் எந்தத் தவறும் இல்லாமல் பதிவு மூப்பு அடிப்படையில் சரியாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. ஏதாவது சில இடங்களிலே பதிவு மூப்பின் அடிப்படையில் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுத் தெரிவித்தால், அந்த அதிகாரிகள்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் காலதாமதமாவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மின்சார உற்பத்தித் தேவைக்கேற்பவும், தமிழ்நாட்டு மின்சார வாரியத்தினுடைய நிதி நிலைமைக்கேற்பவும், அதிலே காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

3—

சாலைகள்

***8706—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—